# திருக்குறளில் "பெண்" பதிவுகள்

**முனைவர் தீ.சண்முகப்பிரியா**
முதுகலைத் தமிழாசிரியர்
அரசு மேனிலைப்பள்ளி
மேல்கொட்டாய்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** 1

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

உலக இலக்கிய வரலாற்றில் ஒப்பற்றதாக எண்ணத்தகும் சில நூல்களுள் தலையாய சிறப்பினையுடையது திருக்குறள். மனித சமூகத்திற்குத் தேவையான அடிப்டை உண்மைகளை– வாழ்வியல் சிந்தனைகளை அறிவுறுத்தும் நீதி நூல்களுள் திருக்குறள் தலையாயது. மனித இனத்தை நன்னெறிப்படுத்தும் வாழ்வியல் வழிகாட்டியாகவும், காலந்தோறும் புதுப்புது விளக்கம் தந்திடும் பேரிலக்கியமாகவும் திருக்குறள் திகழ்கின்றது. தமிழ்ப் பண்பாட்டின் வாழ்விடமாகவும், தமிழர் தம் வாழ்வியல் நெறியாகவும் திருக்குறள் விளங்குகிறது.

அறிவுப்பசிக்கு என்றும் அமுதமாய் விளங்கிவரும் திருக்குறள், மதிப்பிடற்கரிய செல்வத்தைத் தன்னகத்தே வைத்துக்கொண்டு வந்தோர்க்கு எல்லாம் வாரி வழங்கும் வள்ளலைப் போலத் தன்னை அணுகியவர்களுக்கெல்லாம் புதுப்புதுப் பொருளை வாரி வழங்கும் இலக்கிய வள்ளன்மை பெற்றுத் திகழ்கிறது. இத்தகைய பல்வேறு சிறப்புகளைக்கொண்ட திருக்குறளின்கண் திருவள்ளுவர் பெண்ணின் முக்கியத்துவத்தைப் பல குறட்பாக்களில் பதிவு செய்துள்ளார்.

**'எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பிள்ளை காண்**' என்று பாரதியாரும், **'மனைக்கு விளக்கம் மடவார்'** என்று நான்மணிக்கடிகையும்(105), **'மனைக்கு விளக்காகிய வாணுதல் மனைமான்சுடர்'** என்று நற்றிணையும்(104), பெண்ணின் சிறப்பினைப் போற்றுகின்றன.

பெண்களுக்கான சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கி, சமுதாயத்தில் பெண்கள் போற்றப்பட வேண்டும். பெண்மைப் போற்றப்படும்போது சமுதாயம் மேன்மையுறும்; பெண் தன்னுடைய தனித்துவத்தை இழக்காது வாழவேண்டும் போன்ற கருத்துகளை வள்ளுவர் தம் நூலில் பதிவு செய்துள்ளார். அவற்றை ஆய்ந்து வெளிக்கொணரும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

## பெண்கள் போற்றும் அறம்

அன்பும் அறனும் கொண்டு இல்லறத்தில் மக்கள் வாழ வேண்டும். ஏனெனில், அன்பு பகையை முறிக்கும்; நட்பை வளர்க்கும்; நல்லுறவு ஏற்பட வழிவகுக்கும். அறம் செய்வதற்கு அடிப்படையாக மனத்தூய்மை விளங்கும். மேலும்,

அறம் செய்து வாழ்வது மற்றவர்கள் பழிக்கும் மாசில்லாத தன்மையுடையதாக விளங்கவேண்டும் என்பதனைத் திருவள்ளுவர்

**"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அ.்.தும்**
**பிறன்பழிப்பது இல்லாயின் நன்று"** **(குறள் 49)**

என்று பெண்களைப் போற்றும் அறத்தினை விளக்குகின்றார். இல்வாழ்வின் பண்பு, அன்பு செலுத்துவது; அதன் பயன், அறம் செய்வதுஎன்பதனை,

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது"** **(குறள் 45)**

என்ற குறளின் வாயிலாக இல்லற வாழ்வில் பெண்ணின் முதன்மை குறிப்பிடப்பட்டுள்ளது.

### பெண்களின் கற்புநெறி–மனமே காப்பு

அன்பும் அறிவும் ஆற்றலும்கொண்ட மனைவியே இல்லறத்திற்கு இன்றியமையாதவள். இல்லறத்தின் தூணாக இருக்கும் பெண்ணிற்குக் கற்பு என்பது மிகவும் முக்கியமாகக் கருதப்படும் நற்பண்புகளுள் ஒன்றாகும். அக்கற்பின் இயல்பினைப் பற்றி வள்ளுவம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. காப்பன காத்தும், கடிவன கடிந்தும் ஒழுகும் ஒழுக்கமுள்ள மனநிலையே கற்பு என்பதை வள்ளுவர்,

**"பெண்ணிற் பெருந்தக்கயாவுளகற்பென்னும்**
**திண்மையுண்டாகப் பெறின்"** **(குறள் 54)**

என்ற குறள் மூலம் விளக்குகிறார். கற்பு என்னும் மனத்திண்மை இருக்குமானால் பெண்ணை விடப் பெருமையுடையவை வேறு எவை உள்ளன? என்று ஆணித்தரமாக வள்ளுவர் வினவுகிறார்.

**"சிறைகாக்குங் காப்புஎவன் செய்யும் மகளிர்**
**நிறைகாக்குங் காப்பேதலை"** **(குறள் 57)**

என எடுத்து விளம்புகின்றார். மகளிரைச் சிறை வைத்துக் காப்பதால் பயனில்லை. அவரின் மனத்திண்மையால் தம் கற்பைக் காத்துக் கொள்ளும் காவலே சிறந்தது என்று ஆடவர்க்கு அறிவுரை சொல்லும்வகையில் பெண்ணின் குண இயல்பினை எடுத்தியம்புகிறார் வள்ளுவர்.

### சீர்மிகு மகளிர்

தெய்வத்தை வணங்காமல் தன் கணவனையே தெய்வமாக வணங்கி வாழ்பவள், வேண்டும் பொழுது பொழியும் மழைக்குச் சமமானவள் (மழையைப் போல இனிதாவாள்) என்று பெண்ணின் இல்லறப் பெருமையை வள்ளுவர் உயர்வுபட எடுத்துரைக்கிறார்.

**"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை"** **(குறள் 55)**

எனப் பெண்மையைச் சிறப்பிக்கின்றார். கணவனையே தெய்வமாகக் கருதும் பெண்கள், இயற்கையையே தங்களுக்கு அடிமையாக்கும் வல்லமை பெற்றவர்களாய்த் திகழ்வர்; இயற்கையும் அவர்கட்குக் கட்டுப்படும் எனும் பொருள்பட இக்குறள் அமைகிறது.

இல்லறப் பெருமையைக் கட்டிக் காக்கும் பெண்கள் எங்ஙனம் சிறப்பிக்கப்படுகிறார்கள்? என்பதை,

**"பெற்றாற் பெறின்பெறுவர்பெண்டிர்பெருஞ்சிறப்புப்**
**புத்தேளிர்வாழும் உலகு"** **(குறள் 58)**

என்று, பெண்ணின் சிறப்பை நயமாக உணர்த்துகிறார். அதாவது தன்னை மனைவியாகப் பெற்ற கணவனால் சிறப்பிக்கப்படும் பெண்கள், மேலுலகிலும் பெரும் சிறப்பினைப் பெறுவார்கள் என்று பெண்ணின் சிறப்புறும் தன்மையைக் குறிப்பிடுகிறார்.

**குணமே இல்லறத்தின் மங்கலம்**

ஒருவனுடைய குணத்தின் தன்மையைக் கொண்டுதான், அவன் நல்லவனா? தீயவனா? என்று கூற முடியும். இதனடிப்படையில் வள்ளுவர் பெண்ணில் குணத்தைக் கூறி, அதன் பயனைக் குறிப்பிடுகிறார்.

**"மங்கலம் என்பமனைமாட்சிமற்றுஅதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு"** **(குறள் 60)**

என்று விளக்குகிறார். மனைவியின் சிறந்த குணங்களே இல்லறத்திற்கு மங்கலமாகும். அதன் அணிகலன் நல்ல மக்களைப் பெறுதலாகும் என்று குணங்களின் வழி அதன் பயனை வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

**விருந்தோம்பல் போற்றும் பெண்கள்**

இல்லை ஆளுபவள் இல்லாள். அந்த இல்லாள் முக மலர்ச்சியோடு விருந்தினரைப் போற்றுவதால்தான் அவ்வீட்டில் திருமகள் குடி இருக்கின்றாள் என்று கூறுவதிலிருந்து பெண்ணின் உண்மையான பணிவும் அறமும் பளிச்சிடுகின்றன. இதனை,

**"அகனமர்ந்துசெய்யாள் உறையும் முகனமர்ந்து**
**நல்விருந்துஓம்புலான் இல"** **(குறள் 64)**

என்ற குறள் மூலம் தெளிவுப்படுத்துகின்றார்.

**பெண்ணின் திறன்**

இல்வாழ்க்கை என்ற தவம் சீராக ஒழுகப் பெண் பெருந்துணை ஆகிறாள். அதனால்தான் அவளை "இல்லாள்" - "இல்லத்தை ஆள்பவள்" என்ற சொல் தந்து இல்லத்தரசி ஆக்குகிறார் வள்ளுவர். பெண்ணானவள் எங்ஙனம் இல்லத்தில் செயல் புரிந்திட, கடமையாற்றிட வேண்டும் என்பதனை,

**"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்"** **(குறள் 56)**

என்ற குறட்பா மூலம் உணர்த்துகிறார். இந்தக் குறளே பெண்ணுரிமைச் சாற்றும் பேறு பெற்ற குறள் என்று கூறின் அது மிகையாகாது. கற்பு நெறி வழுவாது தன்னைக் காத்துக்கொள்ளும் தகுதி உடையவளாகவும், தன் கணவனையும் பாதுகாக்கக்கூடியவளாகவும், பெருமையமைந்த சொல் உண்டாகும்படி இல்லறத்தைக் காப்பாற்றிச் சோர்வின்றி வாழ்பவளே சிறந்த பெண். இத்தகைய பெருமையைப் பெண்ணுக்குத் தந்திருக்கிறார் வள்ளுவர்.

**'காதலொருவனைக் கைப்பிடித்து–அவன்**
**காரியம் யாவிலும் கைக்கொடுத்து!'** **(பாரதியார்கவிதைகள்)**

என்று பாரதியார் குறிப்பிடுவதுபோல, அன்பான கணவனின் எல்லாச் செயல்களுக்கும் உதவக்கூடிய இயங்கு சக்தியாக விளங்குபவளே பெண் என்கிறார்.

**இல்லவள் மாண்பு**

ஆணின் மொத்த வாழ்க்கைக்கும் துணை என்னும் வகையில் வாழ்க்கைத் துணையாக - இல்லறத்தின் ஆணிவேராகப் பெண் இருக்கிறாள் என்பதால் அவளுக்கு இல்லாள் என்ற பட்டத்தைக் கொடுத்து, அவளின் மாட்சியும் வீட்சியுமே இல்லறத்தின் மாட்சியும் வீட்சியும் என்று இவ்வதிகாரத்தில் விரிவாக விளக்குகிறார்.

**"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை"** **(குறள் 53)**

என்று இல்லத்தை ஆட்சி செய்யும் இல்லவள் மாண்புடையவளாகத் திகழும்பொழுது அந்த இல்லமே மேன்மையடைகிறது. இல்லையெனில், அவ்வில்லறம் பாழாகின்றது என்பதைத் தெளிவுபடுத்துகின்றார். மனைக்குரிய மாண்பு ஒருவனது மனைவியிடத்து இருப்பின் இல்லாதது

ஏதுமில்லை; அம்மாண்பு அவளிடத்து இல்லையாயின், அனைத்தும் இருப்பினும் ஏதுமில்லாததாகும் என்றும் குறிப்பிடுகின்றார்.

கணவனுக்கு மனைவி என்பவள் மிகவும் முக்கியமான துணையாக விளங்குகிறாள். தலைவியுடன் வாழும் வாழ்க்கையைவிடப் பொன்னுலக வாழ்க்கை இனிதாகாது. இக்கருத்தை அறிவுறுத்தும் வகையில்,

**“தாம்வீழ்வார்மென்றோள் துயிலின் இனிதுகொல்**
**தாமரைக் கண்ணான் உலகு”** **(குறள் 1103)**

என விளம்புகிறது திருக்குறள்.

**வாழ்க்கைத் துணைநலம்**

ஒருவனுக்கு அமையும் மனைவி சிறந்த இணையாக அமைய வேண்டுமானால், இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்குண நற்செயல்கள் உடையவளாகவும், தன்னை மணந்துகொண்ட கணவனது செல்வத்துக்கு வருவாய்க்குத் தக்கவாறு செலவு செய்து, செம்மையாகக் குடும்பத்தை நடத்தக் கடமைப்பட்டவளாகவும் இருக்க வேண்டும் என்பதை,

**“மனைத்தக்கமாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை”** **(குறள் 51)**

என்று வாழ்க்கைத் துணையாகும் தகுதியை எடுத்துக்காட்டுகின்றார்.

**இல்லத்தின் மாட்சிமை–மகளிரிடம் இருக்கக் கூடாதன**

ஒரு குடும்பம் மாட்சிமையடைவதற்கு–மேன்மையடைவதற்கு - அந்தக் குடும்பத்தில் ஆடவன் சிறப்பாக அமையவேண்டுமா? அல்லது செல்வம் மிகுதியாக இருக்கவேண்டுமா? என்றால் இவைகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால், அந்தக் குடும்பத்தின் தலைவி சிறப்பாக–மனைமாட்சியை அறிந்தவளாக அமைந்தாலே எல்லாச் சிறப்பும் தாமே அமையும். எக்காலத்திலும் போற்றக்கூடியவளாக, மற்றவர்கள் இகழ்ச்சிக்கு ஆளாகாதவளாகப் பெண் திகழவேண்டும் என்பதைக் கருத்திற்கொண்ட வள்ளுவர்,

**“மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித் தாயினும் இல;”** **(குறள் 52)**

என்று குறள் அமைக்கிறார். மனைவியைப் பெற்றாலே அவன் வாழ்வில் எல்லா நூல்களையும் பெற்றவன் ஆகின்றான் என்றும், பெண்ணின் மாட்சியே இல்லத்தின் மாட்சி என்றும், மனைவியிடத்து இல்லறத்திற்கு வேண்டிய நற்குண நற்செய்கைகள் இல்லையெனில், அவள் எவ்வளவு பெருமையுமையவளாக இருப்பினும் பிறர் மதியார் என்று தெளிவாக விளக்குகிறார்.

**தாய்மை நிலை**

பெண் பண்புடைய மக்களைப் பெறுவதன் வழி தாய்மையின் உயர்வினைப் புலப்படுத்துகின்றார். அதனால்தான், தம்மக்கள் சிறுகை அளாவிய கூழ் அமிழ்தினும் இனிது என்றும், குழந்தைகள் மெய்த் தீண்டல் உடற்கின்பமாகவும், சொற்கேட்டல் செவிக்கின்பமாகவும் குறிப்பிடுகின்றார்.

**“ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்டதாய்”** **(69)**

என்கிறார். தன் மகனைச் சான்றோனாகக் கேட்ட தாயின் மன மகிழ்ச்சியினைச் சுட்டியுள்ளார்.

**பெண்ணின் மென்மை**

தலைமகளின் உள்ள குறிப்புகளைச் சுட்டுவதற்காக அவளின் பார்வையினைக் கூறும்போது ஒரு நோக்கு, நோய் நோக்கு என்றும், இன்னொன்று அந்நோய்க்கு மருந்து என்றும் குறிப்பிடுகின்றார். பெண்மையின் மென்மையைக் குறிப்பிடும்போது,

**“அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்**
**அடிக்குநெருஞ்சிப் பழம்”** **(1120)**

என்று கூறுகின்றார்.

## தொகுப்புரை

திருக்குறள் அறநெறிக் கருத்துகளைப் புகட்டுவதற்காகத் தோன்றினாலும் மகளிர் சமுதாயம் பின்பற்றும் நல்லறமான மாண்புகளை எடுத்துரைத்துப் பாடுவதிலும் அக்கறைகொண்டு விளங்குகிறது. வள்ளுவர், பெண்ணை அன்புடையவராக - அறம் சார்ந்தவராக - பண்பு நிலை உடையவராகப் போற்றியுள்ளார். இத்தகு சிறந்த நிலையில் நல்வாழ்வு வாழுகின்றோர், “வையத்துள் வாழ்வாங்குவாழ்பவர்” எனத் திருவள்ளுவரால் போற்றப்படுகின்றனர்.

## பார்வை நூல்கள்

1. திருக்குறள், பரிமேலழகர் உரை.
2. பாரதியார் கவிதைகள்.
3. நாண்மணிக்கடிகை.
4. நற்றிணை.